தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 – பங்குனி 24

2010 ஏப்ரல் 7, புதன்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை—தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9—30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்"

சொற்களை அளவறிந்து உரைத்திடும் தூயவர்கள் அவையிலிருப்போரின் வகையறியும் ஆற்றல் உடையவராயிருப்பின் பிழை நேருமாறு பேச மாட்டார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

21—

ஏற்றுமதி மையம்

***47443—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி தொகுதியில் மாம்பழக்கூழ் ஏற்றுமதி மையம் எப்போது தொடங்கப்படும்?

[2010 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணகிரி தொகுதியில், மாம்பழக்கூழ் ஏற்றுமதி மையம் அமைக்கும் திட்டம் எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு டி. செங்குட்டுவன்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களாட்சியின் மகத்துவத்தைப் போற்றும் வகையில், விளங்கும் மாண்புமிகு முதல்வர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிந்தனையால் உருவாக்கப்பட்ட திராவிட கலாசார சின்னமாக விளங்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் புதிய சட்டமன்றத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர், தமிழகத்தின் எதிர்காலம், ஓய்வறியா உழைப்பாளி தளபதியார் அவர்களுக்கும் முதலில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மா, பலா, வாழை ஆகிய முக்கனிகளில், முதன்மையானது மா. இந்த மா, உலகளவில் 63 நாடுகளிலே பயிரிடப்படுகிறது. உலக மாம்பழ உற்பத்தியான சுமார் 19 மில்லியன் டன்களில், இந்தியாவில் 60 சதவிகிதத்திற்கு மேல் உற்பத்தியாகின்றது. இதில் தமிழ்நாட்டில் மட்டும் 1,14,926 ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு சுமார் ஆறேகால் இலட்சம் மெட்ரிக் டன் மாம்பழங்கள் உற்பத்தியாகின்றன. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மட்டும் 40 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் மாம்பழம் பயிரிடப்பட்டு சுமார் மூன்று இலட்சம் மெட்ரிக் டன் மாம்பழங்கள் உற்பத்திச் செய்யப்படுகின்றன. இதன்மூலம் விவசாயிகளுக்கு ஆண்டொன்றிற்கு சுமார் ரூ.200 கோடி வருமானம் வருகிறது. சுமார் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கிறது. மேற்படி மாம்பழங்கள் அத்தனையும் வளைகுடா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஏற்றுமதிக்கு ஏற்ற சிறந்த ரகங்களான, அல்போன்சா, மல்கோவா, தோத்தாபுரி, இமாம்பசந்த், பங்கனப்பள்ளி ஆகிய இரகங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விளையும்

2010 ஏப்ரல் 7]

மாம்பழத்தில் மொத்தமாக 10 சதவிகிதம் மட்டுமே அரைத்து பதப்படுத்தப்படுகிறது. மேலும் அதிக எண்ணிக்கையில் தொழிற்சாலைகள் வரவேண்டுமென்ற எண்ணம் அந்த விவசாயிகள் மத்தியில் நீண்டகாலமாக மேலோங்கி நிற்கிறது. மாம்பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அனைத்தும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தனியார்வசமே உள்ளன. அவர்கள் சிண்டிகேட் அமைத்துக்கொண்டு, விவசாயிகளுக்கு சரியான விலையினைக் கொடுக்க மறுக்கிறார்கள். அதனால், விவசாயிகள் வேறு வழியின்றி குறைந்த விலைக்குத் தர வேண்டிய துர்பாக்கியமான சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால்தான், அரசு சார்பிலே மாம்பழக்கூழ் தொழிற்சாலை மற்றும் ஏற்றுமதி மையம் அமைத்துத் தந்தால், ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பும், அரசுக்கு நல்ல வருமானமும் கிடைக்க வாய்ப்புள்ளது. மேற்படி தொழிற்சாலையினை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரியில் மாம்பழக்கூழ் தயாரிக்க தனியார் முன்வந்தால் அரசும் சேர்ந்து தொழிற்சாலை தொடங்கலாம் என்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அவ்வாறு தனியார் யாரும் முன்வரவில்லை. தற்போது, கிருஷ்ணகிரியைவிட பெண்ணாகரம் மாம்பழக்கூழ் தயார் செய்வதற்கு வசதியான இடம் என்று நாங்கள் கருதுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

முற்பகல் 9—35

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்திலே மாம்பழக்கூழ் ஏற்றுமதி மையம் அமைக்கப்படும் என்ற தகவல் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, அந்தத் துறை அலுவலர்களால் இடம் தேர்வு செய்யப்பட்டு, அலுவலகமும் திறக்கப்பட்டு அதற்குண்டான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம்

[2010 ஏப்ரல் 7

எவ்விதமான மூலதனமும் இதிலே போட வேண்டிய அவசியமில்லை. அரசு மாம்பழக்கூழ் ஏற்றுமதி மையத்தை உருவாக்குவதற்கு இடத்தை மட்டும் கொடுத்தால் போதும். இடத்தை மட்டும் தந்தால் பணத்தை விவசாயிகளிடமிருந்து பெற்று மாம்பழக்கூழ் ஏற்றுமதி மையத்தை உருவாக்கிக் கொள்ளலாம் என்ற நிலை இருக்கிறது. அதற்குண்டான திட்டம் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. ஆகவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விளைகின்ற சுமார் 3 இலட்சம் மெட்ரிக் டன் மாம்பழத்தில், சுமார் 2 இலட்சம் மெட்ரிக் டன் மாம்பழம் போக, மீதி ஒரு இலட்சம் மாம்பழங்கள் சாலையிலே கொட்டப்படுகின்றன. அப்படிக் கொட்டப்படுவதன் மூலமாக மாசு உருவாக்கப்பட்டு பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன. ஆகவே, மாம்பழ விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கவும், மாசு ஏற்படாமல் இருக்கவும், தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கவும், அரசுக்கு நல்ல வருமானம் கிடைக்கவும், இந்த மாம்பழக்கூழ் ஏற்றுமதி மையத்தை அரசு ஆரம்பிப்பதற்குண்டான அனுமதியைத் தருமா என மீண்டும் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பு கூறியதைப்போல மாம்பழக்கூழ் கிருஷ்ணகிரிலே தயாரிக்க வேண்டுமென்று பரிந்துரை வந்தது. தனியார் முன் வந்தால் அரசும் சேர்ந்து Joint venture—லே அந்தத் தொழிற்சாலையைத் தொடங்கலாம் என்றும் பரிசீலிக்கப்பட்டது. ஆனால், தனியார் யாரும் முன் வராத காரணத்தினால் அது கைவிடப்பட்டது. இப்பொழுது கிருஷ்ணகிரி மாவட்டத்திலே 44 மாம்பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. 1,52,000 மெட்ரிக் டன் மாம்பழத்திலிருந்து, 75,000 மெட்ரிக் டன் மாம்பழக்கூழ் தயாரிக்கப்படுகிறது. 14 மாம்பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு தனியாரின் மொத்த திட்ட மதிப்பீடு ரூ.48,74,00,000. இதிலே மத்திய அரசாங்கத்தினுடைய மானியமாக ரூ.3,17,00,000 வழங்கப்பட்டும் இருக்கின்றது. ஆகவே, மாநில அரசு தனியாக மாம்பழக்கூழ் தயாரிக்கின்ற வாய்ப்பு தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.என். கந்தசாமி.

2010 ஏப்ரல் 7]

திரு. எம்.என். கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதியிலே ஏறத்தாழ 3,000 ஏக்கரிலே திராட்சை பயிரிடப்பட்டுக் கொண்டிருகின்றது. அதிலே விளைகின்ற திராட்சைகள் பெரும்பாலும் கேரளாவிற்கு சாப்பிடுவதற்காக மட்டுமே அனுப்பப்படுகிறது. நிறைய நேரங்களிலே உரிய விலையும் விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே, திராட்சையிலிருந்து சாறு எடுக்கின்ற தொழிற்சாலை அல்லது திராட்சையிலிருந்து மதுபானம் தயாரிக்கின்ற தொழிற்சாலை ஒன்றை அங்கு அமைக்க வேண்டுமென்பது அங்கு இருக்கின்ற விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கை. அதனை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராட்சையை உற்பத்திச் செய்யக்கூடியவர்களுக்கு நல்ல விலை கிடைக்கவில்லை என்பதால் அதற்கு நல்ல விலை கிடைப்பதற்கு வழிவகை காண வேண்டும் என்பதுதான் மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியாக இருக்குமென்று கருதுகிறேன். அவர் அதைப் பற்றி தனியாக எழுதிக் கொடுப்பாரேயானால், அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய மொத்த மாம்பழ உற்பத்தியில் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில்தான் பெரும்பாலானவை உற்பத்தி செய்யப்படுகின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்குட்டுவன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, விவசாயிகள் எல்லாம் மாம்பழ உற்பத்தியிலே ஆர்வம் காட்டி, மாம்பழ உற்பத்திக்கு மாங்கன்று நட்டு பயிரிட முன்வந்த விவசாயிகள் இப்போது ஆர்வத்தைக் குறைத்துக் கொண்டு, மா உற்பத்தியில் அக்கறை செலுத்துவது இல்லை. காரணம், உரிய விலை கிடைப்பதில்லை. நியாயமான முறையில் ஏற்றுமதிக்கு அல்லது விற்பனைக்கு வாய்ப்பில்லாத காரணத்தினாலேதான் அங்கே அந்தக் குறை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக அது வறண்ட பகுதி,

வறட்சியான மாவட்டங்கள் என்ற அடிப்படையில் அந்தப் பின்தங்கிய பகுதிகளுடைய மேம்பாட்டிற்கு அரசு அதிக உதவி செய்ய வேண்டும். ஏனென்றால், அது மா விற்பனைக்கும், ஏற்றுமதிக்கும் ஏதுவாக இருக்கக்கூடிய பகுதியாகவும் இருக்கிறது. அங்கு தேசிய நெடுஞ்சாலை இருக்கிறது. ஏற்றுமதி மையத்திற்கு சென்னை அல்லது பெங்களூரு செல்வதற்கு வாய்ப்பாக இருக்கின்ற காரணத்தினாலே விற்பனை மையத்தையும், ஏற்றுமதி மையத்தையும் அந்த இரண்டு மாவட்டங்களின் மையப் பகுதியில் துவங்கினால் சிறப்பாக இருக்கும்.

முற்பகல் *9—40*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல மாம்பழத்திற்குப் பிரசித்தி பெற்ற பகுதியாக இருக்கின்ற பெண்ணாகரத்திலே அப்படிப்பட்ட ஏற்றுமதி மையத்தை அமைத்து, விவசாயிகளின் துயர் துடைக்க அரசு ஆவன செய்யுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. கோ.க. மணி அவர்கள் இங்கே சொன்னதைப்போல, மா உற்பத்தி செய்ய வேண்டும் என்பதிலே விவசாயிகளுக்கு இப்பொழுது ஆர்வம் குறைந்து வருகிறது என்பது உண்மைதான். ஆகவே, அங்கு தனியாகத் தொழிற்சாலை தொடங்க வழி இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

22—

சார்பு நீதிமன்றம்

***63515—டாக்டர் க. நெடுஞ்செழியன்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை, அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—